# அதிகபட்ச பொழுதுபோக்கு ⟶ பொருளாதார முன்னேற்ற தடை

உடலில் அதிகபட்ச செயல்படு இயக்க சக்திக்கு ஒரு எல்லையுண்டு. இந்த பலம் மனிதருக்கு மனிதர் அவரின் பரம்பரை, பழக்கவழக்கங்கள், உணவு, சீதோஷ்ணம், சுற்றுப்புற சூழ்நிலைகள் பல்வேறு வாய்ப்புகள் போன்றவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றது. உழைப்பு, ஓய்வு ஆகிய இரண்டும் மாறி மாறி நடக்கவேண்டி இருக்கின்றது. இவை இரண்டில் ஏதாவது ஒன்றை தொடர்ந்து செய்தாலும் உடல் வீணாகிப்போகும். ஓய்வு என்னும்போது உழைப்புக்கு இடையிடையில் சிறிதுநேரம் தூக்கும் என்ற முறையில் முக்கியமாக இரவினில் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் உழைப்பிற்கேற்ற வருமானத்திற்காக அவரவர்களுக்கு உள்ள ஒரு வேலையை தினசரி பலமணிநேரம் செய்யவேண்டியிருக்கிறது, இது தவிர்க்கமுடியாத ஒன்றே. எனவே, அவ்வுழைப்பால் தோய்ந்த, நைந்த மனதிற்கும், உடலிற்கும் சிலநாட்களுக்கு ஒருமுறை என ஓரிரு நாட்கள் பொழுதுபோக்கு என்னும் அம்சத்தை தேவையாக்கிக்கொண்டார்கள்.

பொழுதுபோக்கு என்கிறபோது உட்கார்ந்துகொண்டு எதையாவது பார்த்து, கேட்டு, பேசி, ரசித்து, ருசித்து, சிரித்து மகிழ்வது ஒரு வகை. இன்னொன்று சிறு ஆடி, ஓடி, விளையாடி மகிழ்வது. இவைகளுக்குள் பல தினுசுகள் உள்ளன. நல்ல பொழுதுபோக்குகளை விட தீய பொழுதுபோக்குகளே அதிகம். இவைஇரண்டிற்கும் இடையில் சில பொழுதுபோக்குகள் நல்லவயைா, அல்லது தீயவையா என உணரமுடியாமல் மனிதவாழ்க்கையை ஆட்கொண்டிருக்கிறது, இவைகளை அளவாக கைகொண்டால் நல்லவையாகலாம். அதிகமாக பேணும்போது தீயவையாக மாறலாம். ஆனால், இந்த மொத்த சமுதாயமும் இவற்றை எல்லாம் சிந்தித்துப்பார்த்து செயல்படுத்துவதாக தெரியவில்லை.

ஏனெனில், பல நாட்கள் கடின உழைப்பிற்கு பிறகு ஆசுவாசப்படுத்தும் ரம்பிய மகிழ்ச்சியான ஓய்வை சிறுது நேரங்களுக்கு எடுப்பதை விடுத்து இந்த பொழுதுபோக்கு கொண்டாட்டங்களிலேயே வாழ்வின் பெரும்பகுதியை ஆக்கிரமிக்கப்படும் வகையாக வாழ்க்கை மாறிப்போனது. இதற்கு அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஆதரவுப் பகரப்படுவது பலரும் அவசியங்களை அறியாமை இருப்பதை வெளிக்காட்டுகிறது.

மிகச்சிலரைத் தவிர பெரும்பான்மையான இந்திய மக்களுக்கு பொழுதுபோக்கு என்பது தொலைக்காட்டி நிகழ்ச்சிகள் மற்றம் சினிமாபார்பது என்றாகிவிட்டது. இதன் காரணத்தால் அதில் நடிக்கும் நம்மைப்போலவே மனிதப்பிறவிகள் சாமானிய மனிதர்களுக்கு மிக மிக மேலே மகா கடவுளர்களுக்கு அடுத்த நிலையில் கருதப்பட்டு போற்றப்படுகிறார்கள். இதில் சினிமா னிதர்கள் மிகஉயர்ந்தப் பிரிவினராகவும் அதை அடுத்து சில மடங்கு கீழ் நிலையில் உள்ளவர்களாக தொலைக்காட்சி தோன்றல்கள் உள்ளன.

இப்போது இன்னொரு புது முறையாக சினிமாவில் சாயம் வெளுத்து ஒதுக்கப்பட்டவர்கள் தொலைகாட்சி சேனல்களில் புகுந்துக்கொள்கிறார்கள். காலகாலத்திற்கு நடிப்புத் திரையில் உள்ள மனிதர்களை ஏனைய மனிதர்கள் இப்படித்தான் போற்றிக்கொண்டிருக்கவேண்டுமா என்பது அறிவுள்ளர்வர்கள் இத்தருணத்தில் அவசியமாகச் சிந்திக்கவேண்டிய செயலாகும்.

உண்மையில் சினிமாக்காரர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் சராசரி மனிதர்களே எஜமானர்கள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இருப்பினும் நிலைமை மிகத் தலைகீழாக உள்ளதே, என்ன செய்வது?

மற்றத்தொழிலைப்போல சினிமா ஒரு தொழில் என்பதை நம்மில் பலர் அறியவில்லையா, சில பல சலுகைகளுக்காக அத்துறையை அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு தொழிலாக மாற்ற மிகச்சிரமப்பட்டு இவர்கள் பெற்றார்கள். இத்துறையில் ஒரு குறிப்பிட்ட மனிதர்களே சோபிக்க முடியும் என்பதை நம்பாதீர்கள். இது ஒன்றும் வான்வெளி, அணு அறிவியல் , ஆராய்ச்சித்துறை இல்லை. ஈடுபாடு, பயிற்சி, அனுபவம் வழிகாட்டுதல் சரியான இயக்குதல் கிடைக்கப்பெறும் வகையில் நம்மில் பலர் சிறந்த நடிகர்களாகிவிடலாம். அத்துறையில் உள்ளவர்களுக்கு பலப்பல காரணங்களினால் வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. நம்மைப் பயன்படுத்திக்கொண்டு உயர்த்த்க்கொண்டார்கள்.

சினிமா மற்றும் நாடகங்களுக்கு மிக முக்கியமானது கதைகளே ஒழிய வேறொன்றும் இல்லை. கதை தேவையில்லாத பொழுதுபோக்குகள் வேறு பல உள்ளன. எனவே, சரியான கதையில்லாத படங்களை புறக்கணிக்க வேண்டும். நடிகர், நடிகைகள் யார் நடித்தால் நமக்கென்ன என்ற நிலையில் சினிமா பார்க்க கற்கவேண்டும். மின நன்றாக நடிக்கும் பெரிய திறமைசாலிகளை யாரும் ஓரம்கட்டச்சொல்ல வரவில்லை. அவர்களை மற்றவர்கள் மிஞ்சமுடியாத வரை அவர்களில் தொடருதலை யாரும் தொட இயலாது.

இருப்பினும் மற்ற வியாபாரங்களைப்போல நடிப்பு வியாபாரத்திற்கும் பல புதியவர்களை நாம் அனுமதிக்கவேண்டும். ஏனெனில், இந்த உலகம் ஒரு குறிப்பிட்ட மனிதர்களுக்கு மட்டும் சில காலம் குத்தகை என்றாகுதல் மிகத் தவறு. எனவே, வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படுதலே சிறப்பானது, நியாயமானது.

இதனால் என்ன பயன் இருக்கிறது என்ற கேள்வி எழுமானால் நல்ல பதில்கள் உண்டு. முதலாவதாக பல மனிதர்களில் வயிற்றுப்பிழைப்பிற்கு வழி கிடைக்கிறது. அடுத்தடுத்துப் பார்க்கையில் சில தனிமனிதர்களின் ஆதிக்கம் குறைகிறது. இதனால் நம்மில் வெறிப்பிடித்த, தன் குடும்பத்தை கவனியாத, ரசிகர்கள் என்ற முட்டாள் மக்கள் குறையலாம். பிறகு நமது செலவு குறைந்து வாழ்க்கைத்தரம் உயரும்.

இது எவ்வகையில் சாத்தியம் எனில், நாம் குறிப்பிட்ட நடிப்புகாரர்களை மட்டும் குறிவைத்துக் காத்திருக்கா நிலை வரும்போது புதுப்புது ஆட்கள் இத்தொழிலுக்கு வந்துகொண்டே இருப்பார்கள். இப்போது உள்ள மாதிரி சிலர் மட்டும் நீண்ட காலத்திற்கு சிம்மாசனத்தில் வைக்கப்பட்டு கரண்சிகளை கட்டுக்கட்டாக லட்சங்கள், கோடிகளாக கொடுக்கவேண்டியது இருக்காது. குறைந்த காசுக்கு நல்ல நடிப்புத்தரம் மற்றும் மற்ற தொழில்களைப்போல் போட்டியிருக்கும்போது திரைப்பட தயாரிப்புச் செலவு குறைந்துவிடும். அதன் நேரடித் தொடர்பாக தியேட்டர் டிக்கெட் கட்டணம் பத்தில் ஒரு பங்காகி இரண்டு ரூபாய்களின் கட்டணத்தில் நிறையத் திரைப்படங்கள் காணும் வாய்ப்பு வந்துசேரும். தியேட்டரில் சினிமாப் பார்க்கும் மக்கள் கூட்டம் பெருகும். திருட்டு வி.சி.டிக்கு வேலையே இருக்காது. இதெல்லாம் இங்கு நடந்துவிடுமா என்ன? எல்லாம் ஒரு ஆசைதான்.

ஏனெனில், நம்மைவிட மெத்த அறிவுள்ளவர்கள் முன்னேறியவர்கள் என்று நாம் நினைக்கும் மேலை நட்டவர்களே இச்சங்கதியில் நம்மைவிட கேவலமாக இருக்கும்போது நாம் மட்டும் சலைத்தவர்களா, கூடாது கூடவே கூடாது.

ஒரு வேலை அதிசயத்திலும் அதிசயமாக சினிமாக்காரர்களே சிம்மாசனம் வேண்டாம் என்றாலும் நமது ரசிகப்பெருமக்கள் விடுவதாயில்லை. இப்போது இதற்கு இன்னொரு காரணியாக சினிமாக்காரர்கள் அரசியல் கட்சிகள் ஆரம்பித்து பலருக்கு கட்சிப்பொறுப்புகள் கொடுத்து அரசியலின் அவ்வப்போதைய பல லாபங்களில் பங்குரிமைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாகிறது. எனவே, ஒரு தொழில் நோக்கு எதிர்ப்பார்ப்புகளுடன் இன்றைய ரசிகர்களின் கூட்டம் நடிகர்களின் பின்னால் பின்தொடர்ந்துகொண்டிருக்கிறது. மேலும் அந்தந்தப்பகுதிகளில் இளைஞர்கள் தங்கள் படங்களைப்போட்டு பேனர்கள் போஸ்டர்கள் செய்து முச்சந்திகளில் பார்வைக்கு வைத்து பலவித தேவைகளுக்கான முதலில் விளம்பர வெளிப்பாடுகளுக்கு பயன்படுகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என இங்கே நடக்கும் கூத்துக்களின் கோரத்தாண்டவம் எங்கேபோய் முடியுமோ தெரியவில்லை. ஏதோதோ பெயர்களில் எதெதற்காகவோ எண்ணற்ற சானல்கள் எங்குபார்த்தாலும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவை ஏற்கனவே சோம்பேறிகளாகி இருக்கும் மனிதர்களை மேலும் சோம்பேரிகளாக்கி தொலைகாட்சி பார்ப்பதைவிட வேறு எந்த வேலைகளையும் செய்யவிடக்கூடாது என்பதை தீவிரமாகச் செயல்படுத்திவருகின்றன.

இதற்கு ஆண்மாக்களைக் காட்டிலும், பெண்மக்கள் சமுதாயம் முழுமையாக அடிமைப்பட்டுப்போய் ஒவ்வொரு நாளும் தேவையில்லாமல் அழுதுப்புலம்பிக்கொண்டிருக்கிறது. அங்கே வரும் சிரிப்புகளைக் காட்டிலும் காசுக்காக வரும் பொய் அழுகைகளை நம்பி தாங்களும் உருகி தினசரி பலதடவைகள் கண்ணீர் சிந்திவருகின்றனர். இதற்கெல்லாம் விடிவுகாலம் வருமா?

அதிலும் குறிப்பாக சீரியல்கள் என்றபெயரில் ஒரு சாதாரண சிறு கதையை ஒவ்வொருநாளும் இஞ் இஞ்சாக நகர்த்தி வருடங்களுக்கு வளர்த்தி மக்களை உட்காரவைத்து முதுமைக்கு தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மெகா மகா சீரியல் சனியனெல்லாம் ஒழிந்து அடிமைப்படுத்துதல் அகலவேண்டும். ஓரிரு நாட்கள் அல்லது ஓரிரு வாரங்களில் முடியும்படியாக கதைகள் வாயிலால் மனிதர்களுக்கு மனரீதியான விடுதலை கிடைக்கும். சம்மந்தப்பட்டவர்களிடம் எங்களுக்கு நல்வழிககாட்டுங்கள், வாழவிடுங்கள் என வணங்கி வேண்டுகிறோம்.

இரண்டு மணிநேரத்தில் சினிமாக்களில் எத்தனைப்பகுதிகள் சீரியர்களை விட பலமடங்கு சிறப்புப்பெற்று வரலாறு படைத்திருக்கின்றன, படைத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை உதாரணமாகக் கொள்ளலாமே. ஒரு நாளைக்கு ஒரு சானலில் இருபத்திமூன்று சீரியல்களில் சிறிதுசிறிது காட்டுவதற்கு பதிலாக ஒன்றிண்டு சீரியல்களை வைத்துக்கொண்டு கால்பகுதி அளவில் காண்பித்து விரைவாக முடிக்கச்செய்யலாமே.

………

சில நூற்றாண்டுகளுக்கு முன் வெட்டி ராஜாக்கள் கூஜாக்கள் வைத்து பெரும்பொழுதை கூத்தடித்து கழித்து வந்தனர். அப்போதைய சாமான்ய மக்கள் இதை வேடிக்கைப்பார்த்து வெந்து நொந்தனர். ஆனால், இப்போதைய சாமான்ய மக்கள் அனைவரும் தாங்களே ராஜாக்களாகி பொழுதுபோக்குவதை வாழ்வின் முக்கிய லட்சியமாக கொண்டு செயல்பட்டுவருகின்றனர். இதற்கு வளர்ந்த வளரும் ஏழைநாடுகள் என்கிற பாகுபாடு இல்லை.

வளர்ந்த நாட்டினரிடம் பணம் பெருத்துவிட்டதால் அவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கொண்டாடலாம். அது அவர்களுக்கு கட்டுப்படியாகும். ஏனெனில் அவர்களின் முன்னோர்களில் பலர் மிகுந்த அறிவுடையவர்களாக விளங்கி சம்பாத்திய பாதைகளை காண்பித்துவிட்டு போய்விட்டார்கள். அவர்கள் மிதமிஞ்சி சம்பாதித்தப்பிறகு மற்றவர்கள் ஏழை பிச்சைக்காரர்களாக தெரிந்ததால் இவர்களுக்கு தலைகால் புரியாமல் கூத்தடிக்க ஆரம்பித்தார்கள். இப்படியாக ஆரம்பித்த கூத்தடிப்பு இன்று ஓங்கி வளர்ந்து மனித சமுதாயத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறது.

வளர்ந்து நாட்டுக்காரர்கள் அல்லது பணக்காரர்கள் எதைச் செய்தாலும் அதைக் கண்மூடிக்கொண்டு காப்பி அடிப்பது

மற்றவர்களுக்கு கைவந்த கலை. நாளைய பொருளாதாரத்திற்கு வழி இல்லாதவர்களும் 'புலியைப் பார்து பூனை சூடுபோட்டுக்கொண்ட' கதையாக இந்த பொழுதுபோக்குகளில் அதிகநேரம் மூழ்கிப்போய் கரையேற முடியாமல் துன்பத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல எதுவும் அளவுக்கு மீறினால் அது தீமையை விளைவிக்கும். நடனம், இசை, விளையாட்டுக்கள், வானவேடிக்கைகள், சூதாட்டம், செக்ஸ் இன்னும் அனைத்து வகை பொழுதுபோக்குகளும் ஒரு கால எல்கைக்குள் இருந்தால் இந்த மக்களின் பொருளாதார மேன்மைக்கு இடையூறு இல்லாமல் அவசியமான அளவான மகிழ்ச்சியூட்டலைச் செய்யும்.

உண்மையில் எந்த தனிமனிதருக்கும் பொழுதுபோக்கு அம்சங்களில் இருந்து எந்த பொருளாதார வளர்ச்சியும் கிடையாது. அதை நடத்துபவர்களும், பங்கெடுப்பவர்களும் இந்த அப்பாவி மக்களிடம் நல்ல காசுகறந்துகொண்டிருக்கிறார்கள். பொழுபோக்களினால் வருமானம் பெருவோர் மொத்த மக்களின் 0.01 சதவீதமே இருப்பார்கள். மற்றவர்கள் இவர்களைப் பார்த்து ஆர்ப்பரித்துப் பாராட்டி துதிபாடி அவர்களைக் கொண்டாடுவதற்கு செலவு செய்பவர்கள்.

இந்த பொழுதுபோக்குகளில் விளையாட்டுகளும் பெரும் அடக்கம். குறிப்பாக கிரிக்கெட் என்ற விளையாட்டை நாள் முழுக்க, மாதம், வருடத்தின் பெரும்பகுதி என சில விளையாட்டுக்காரர்கள் விளையாடி அதை என்னென்னவோ விதங்களில் வர்ணனை செய்து, கணக்கு வழக்குகள் கொடுத்து மற்றவர்களை நிரந்தரக் கோமாளிகளாக்கி வைத்திருக்கிறார்கள்.

இந்த கிரிக்கெட் ரொம்பநாளாகவே ரௌத்திரம் பண்ணிக்கொண்டிருக்கிறது. கிரிக்கெட் வர்ணனை என்ற முறையில் தொலைகாட்சிகள் வானொலிகளில் குறைந்த பட்ச ஆறு மாத கூட்டுத் தொகை காலத்திற்கு காலை முதல் இரவு வரை நேரத்தை கபளீகரம் செய்துகொண்டிருக்கிறது. இது என்ன சாபக்கேடு, நம் மனிதர்கள் ஏன் இதை உணர மறுக்கிறார்கள். உலகத்தில் முன்னேறிய, முன்னேறுகிற எண்ணற்ற நாடுகளுள் இந்த கூத்து இல்லையே! அது எப்படி?

இந்த கிரிக்கெட் எப்படி வந்திருக்கிறது. யார் யார் விளையாடுகிறார்கள் என்பதைப் பார்போம். முந்தைய வெள்ளைய ஆதிக்க ஏகாதிபத்திய தலைமையகமான இங்கிலாந்து நாடும் அதன் அடிமைகளாக இருந்து விடுதலைப்பெற்ற இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற உலகில் ஒரு சிறு கூட்டம் மட்டுமே அதிகமாக விளையாடுகின்றனர்.

ஐரோப்பிய, ஆசிய, அமெரிக்க, ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள சுமார் நூற்றைம்பது நாடுகளுக்கு மேல் இவ்விளையாட்டை அங்கீகரிக்கவில்லை. கிரிக்கெட் சில நூற்றாண்டுகளை கடந்துவிட்ட நிலையிலும் பல நாட்டு மக்களுக்கு இது என்னவென்றே தெரியாது, இதற்கு பல காரணங்கள் இருக்கவேண்டும் என்று நினைக்கத்தோன்றுகிறது. ஏனைய விளையாட்டுகள் யாவும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு உட்பட்டு இருக்கும். பல விளையாட்டு வகைகளின் காலம் இரண்டு இருபது அல்லது இரண்டு நாற்பத்தைந்து நிமிட நேரங்களில் முடிவதாக இருக்கும். இன்னும் சில விளையாட்டுக்கள் புள்ளிகள் கணக்கில் கிட்டத்தட்ட இதே நேர அளவுகளில் வரும்படியாக அமைந்திருக்கின்றன. ஓட்டப்பந்தயங்கள், மைதான தனிநபர் ஆட்டங்கள் போன்றவை சில நொடிகள் முதல் நிமிடங்களில் முடிந்துவிடும் தன்மைகொண்டவை.

இந்த நேரங்களுக்குள்ளேயே மேற்படி விளையாட்டுகளை விளையாடும் வீரர்கள் அதிகபட்ச கலைப்புஅடைந்து நுரைதள்ளிவிடுவார்கள். உடலின் அனைத்து செல்கள், நரம்புகள், உறுப்புகள் ஆகியவை அதிகபட்ச இயக்குதலுக்கு ஆட்பட்டுப்போகும். அதுதான் விளையாட்டு. பார்வையாளர்களும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தங்களுக்குப்பிடித்த விளையாட்டை ரசித்துவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கச் சென்றுவிடுவார்கள்.

ஆனால், இந்த கிரிக்கெட் இருக்கிறதே! இது விசித்திரமானது, வினோதமானது. காலையில் ஆரம்பித்து மாலை மற்றும் இரவுவரை விளையாடுகிறார்கள். டெஸ்ட் போட்டிகளில் ஒரு ஆட்டத்தை தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு விளையாடுகிறார்கள். முன்பு இந்த ஐந்து நாள் ஆட்டத்திற்கு இடையில் ஒரு ஓய்வுநாளும் கொடுக்கப்பட்டிருந்து பின்னர் நீக்கப்பட்டது. இந்த ஐந்துநாட்களில் விளையாடிவிட்டு எந்த அணியும் வெற்றி தோல்வி பெறவில்லை என்று ‘டிரா’ என்று வேறு சொல்வார்கள். இந்த மக்கள் சிந்திப்பதே இல்லை. இத்தனை நாட்களை வீணாக்க வேண்டுமென.

எந்த வேடிக்கை நிகழ்ச்சியாயினும் பார்க்கும் எவருக்கும் நேரம் போவது தெரியாது, இதைச் சொல்கிறவன் உட்பட ஒரு பொழுதுபோக்கில் மூழ்கிவிட்டால் விடுபட இயலாது, தொடர்ந்து உழைப்பதுதான் சிரமம். இந்த விளையாட்டில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் ஆட்டக்காரார்கள் மைதானத்தில் விளையாடும்போது பந்து வீசுபவர், மட்டையாளர் மற்றும் ஓரளவினில் விக்கெட் கீப்பர் போன்றோர் மட்டுமே அந்நேரத்தில் மிகுந்த உழைப்புக்குள்ளவர்கள் ஆவார்கள். மற்ற விளையாட்டுகளில் உள்ளதில் பத்தில் ஒரு பங்குக்குக் கூட உடலுழைப்பு இல்லை. மணி கணக்கில் மைதானத்தில் முழு உடை, தொப்பி போட்டு நின்றுக்கொண்டு வாயில் சூயிங்கம் மென்றுக்கொண்டு இருப்பார்கள். பந்துவரும்போது ஒருவர் மட்டுமே வீசுவார். மட்டையில் பட்டு ஓடும் பந்தை ஒன்றிரண்டுபேர் நின்று, ஓடி, தடுத்து, பிடித்து வருவார்கள். மட்டையில் பட்டு, படாத பந்தை பின்புறம் நிற்பவர் தடுப்பார் அல்லது பிடிப்பார். இவ்வாறாக இந்த ஆட்டம் நாள் கணக்கில் வருடக்

கணக்கில் விளையாடப்படுகிறது.

இதை பெரும் கூட்டமாக மக்கள் நேரில் போய் ரசித்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லது வீடுகள், அலுவலகங்கள், தொழிலகங்கள், வியாபாரத்தலங்கள் போன்ற இடங்களில் உள்ளவர்கள் தொலைகாட்சி, வானொலி மூலமாக வர்ணனைகள் கண்டு, கேட்டு களிக்கிறார்கள்.

விளையாடுபவர்கள் குனிவது, நிமிர்வது, வளைவது, திரும்புவது, சிரிப்பது, துப்புவது, மட்டையை பந்திற்குத் தகுந்தமாதிரி பிடித்து அடிப்பதுப் போன்றவை மிக மேன்மையுடன், பெருமையுடன், அதிசயத்துடன் வர்ணனைகளால் வர்ணிக்கப்படுவதை இவ்விளையாட்டை இந்த அளவிற்கு கொண்டுவந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

இவ்விளையாட்டு உருவான காரணத்தை பெரும்பாலோர் கிட்டத்தட்ட ஒரே விதமாகக் கூறியுள்ளனர். பழைய காலத்தில் கால்நடைகளை மேய்க்க புல்வெளிகள், காட்டுப்பகுதிகளில் நாள்முழுக்க இருந்திருக்கவேண்டிய ஆங்கிலேயர்களே இதன் அடிப்படை மூலக கர்த்தாக்கள். மேலும், இங்கிலாந்து கோடைப்பருபம், சூரிய வெப்பம் குறைவான உள்ள நாடு என்பதால் கிடைக்கும் வெயில் சூட்டை அனுபவிக்க நாள் முழுவதும் திறந்தவெளியில் இருப்பது சுகமானது.

கால ஓட்டத்தில் கால்நடை மேய்த்த சமயங்களில் நாள் முழுக்க சும்மா இருக்க இயலாமல் சிறு குச்சிகள் மற்றும் கற்களைப்போட்டு கம்பால் அடித்து, நமது 'கிட்டிப்புல்' விளையாட்டைப்போல விளையாடி வெயிலில் நின்று பொழுதைப்போக்கி இருக்கிறார்கள். இப்படி கால்நடை மேய்க்கும் சமயங்களுக்கும், வெயில் சுகம் பெறுவதற்குமாக ஆரம்பித்த பொழுதுபோக்குமுறை நாளுக்கு நாள் ஏற்பட்ட மாற்றங்களை ஒரு நிலையை அடைந்து அறிவின் வளர்ச்சியால் சட்டத்திட்டங்கள் பல கொண்டுவரப்பட்டு கிரிக்கெட் ஆடி இருக்கிறது.

இது இப்படி ஆனது பரவாயில்லை. ஆனால், இது இந்தியாவைப்போன்ற வளரும் நாடுகளை பாடாய்ப்படுத்தி வருவதுதான் பாவம். மேற்படி வெள்ளயர்கள் எங்கேயெல்லாம் நாடு பிடித்து அக்கிரம ஆட்சி நடத்தினார்களோ, அங்கே அவர்கள் இந்த விளையாட்டை விளையாடினார்கள். அங்கு பந்து பொறிக்கிப் போட்டவர்கள், பலவித எடுபிடி வேலைகளைச் செய்தவர்கள் வேடிக்கைப் பார்த்தவர்கள் போன்றோரில் வாரிசுகளாகிய நாம் கிரிக்கெட்டுக்கு வாரிசுகளாகிப்போனோம். அவர்கள் காலனி நாடுகளை மட்டும் விட்டுச் செல்லவில்லை. கிரிக்கெட் என்ற முன்னேற்ற முட்டுக்கட்டையும் முன்னேற்பாடாக வழங்கிவிட்டுப்போயிருக்கிறார்கள்.

ஒரு வேலை இந்த கிரிக்கெட் இந்தியா போன்ற நாடுகளில் இல்லாமல் இருந்திருந்தால் அந்நாடுகள் இப்போது இருப்பதைவிட நிச்சயமாக பல மடங்கு முன்னேறியிருக்கக் கூடும் என்று உறுதியாக கூறிவிடலாம். ஏனெனில், அதற்கு செலவிடப்பட்ட பத்தாண்டுகளில் கோடான கோடி மக்களின் பலநூறுகோடி மனித உழைப்பு நேரங்கள் சத்தியமாக கொஞ்சமாவது மேம்பாடுகளுக்கு பயன்பட்டிருக்கும் என்பதை எவ்வித பயமும் இன்றி ஆணித்தரமாக அடித்துச்செல்ல முடியும்.

எந்த நாட்டிற்கும் மக்களுக்கும் நவீன வாழ்வியல் முறையில் விளையாட்டுப்போட்டிகள் என்பது மிக அவசியமானவைகளே. ஆனால் இப்படியான விளையாட்டு அவசியமா இதன் லாப நஷ்டங்களை, சாதக பாதகங்களை எண்ணிப்பார்ப்பது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். எந்த ஒரு விஷயமும் பழகிவிட்டால் அதற்கு அடிமையாகி அதன் வாழ்கை நடைமுறையாகிறது. இது நல்லவைகள் கெட்டவைகள் இரண்டும் அடங்கும். இதற்கு உதாரணமாக புகைப்பிடித்தல், மது அருந்துதல், மற்ற பலவித போதை பொருட்கள், விபச்சாரம் போன்ற தீங்குகள் இச்சமூகத்தில் இரண்டறக்கலந்துவிட்டன, பழகிவிட்டன. பல நாடுகளில் இவை மிகச் சாதாரணமாகி சட்டப்பூர்வ அனுமதிப் பெற்றவையாகிவிட்டன.

இங்கு கிரிக்கெட் என்பது நம்மை அடிமைகளாக்கி விட்டிருக்கிறது. முதல் குடிமகன் முதல் கடைசி குடிமகன் வரை இதற்கு ஆதரவாளர்களாகி விட்டனர். அரசுகள், தலைவர்கள், பெரும் வியாபாரிகள் என எல்லோரும் போற்றிப் பராமரிக்கிறார்கள். கோடி கோடியாய் பணம் வருகிறது, செலவிடப்படுகிறது. நூதன விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. சட்டத்திற்குப் புறம்பான பணப்போட்டிகள், தில்லுமுல்லுகள், நீதிமன்ற வழக்குகள், தலைமைக்குத் தகராறுகள் என நித்தமும் இதைப்பற்றிய செய்திகள் தொலைக்காட்சி, வானொலி, செய்தி பத்திரிக்கைகளில் முக்கியச் செய்திகளாக தலைப்புச் செய்திகளாக வருகின்றன.

இந்நாட்டின் அதிமிக முக்கியமான நாட்டு மக்களின் முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றுக்கான ஈடுபாடுகள், முக்கியத்துவங்களைக்காட்டிலும் பல மடங்கு கூடுதலாக கிரிக்கெட் விளையாட்டிற்கும், அதன் ஆட்டக்காரர்களுக்கும், அதைப்பற்றிய செய்திகளுக்கும், அரசர்கள் ஆண்டிகள் வரை படுபயங்கர முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்கள். இது என்ன மாயையோ! என்று புலப்படவில்லை.

லஞ்ச ஊழலில் மோசமான அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் கலப்பட வியாபாரிகள் மிகுந்த இந்நாட்டில் மேலும் இப்படியொரு சாதனம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இவற்றிலிந்து எவரும் மீல முடியாத சக்திகொண்ட இவைகளை சாபக்கேடுகள் என்று சொல்லாமல் என்ன சொல்வது?

இதில் இன்னொரு உண்மையெனில் இந்தியா மற்றும் வேறு சில கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் மக்களுக்கு உள்ள உடல் அளவுகள், உடல்திறன் தகுதி, உலக அளவில் அதன் தரங்களில், தேவைகளில் இல்லை. இதனால் வேறு விளையாட்டுக்களை உலக அளவில் விளையாட இயலாது என்பது ஒரு நிதர்சனமான உண்மை. பல ஆயிரம் ஆணடுகளாக நாம் வாழும் வாழ்க்கைமுறை, முக்கியமாக உணவுப்பழக்கம், உழைப்புத்திறன், பரம்பரை குணம், சக்தி போன்றவை நம் மனிதர்களை சராசரியாக மேற்கித்திய நாட்டினருக்கு இணையாக வைக்கவில்லை. அவர்கள் சராசரியாக ஆறரை அடி உயரம் நூறு கிலோ எடை கொண்டவர்களாக இருக்கையில் இந்தியர்கள் சராசரி ஐந்தேகால் அடி உயரமும், 60 கிலோ எடை கொண்டவர்களாக உள்ளனர்.

நூறு கோடிக்கு மேல் சனத்தொகை உள்ள இந்தியா ஒரு ஒருகோடிக்கு குறைவான சனத்தொகை கொண்ட மேலைநாடு ஒன்றுடன் வேறு எந்த விளையாட்டுக்களிலும், எந்தக் காரணத்திலும் ஈடுகொடுக்க இயலாது. இன்னும் பல நூற்றாண்டுகள் சென்றாலும் நிலைமை மாறாது. நாம் ஒரு படி மேலே போகும்போது அவர்கள் இரண்டு படி மேலேறி இருப்பார்கள். உதாரணமாக. கால்பந்து விளையாட்டை எடுத்துக்கொண்டால் உலகில் இரண்டாவது சனத்தொகையைக் கொண்ட இந்தியா நூற்றி ஐம்பதாவது இடத்தில் இருக்கிறது. இருப்பினும் இந்தியர்கள் பல நூற்றாண்டுகளாக கல்பந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் உள்ளவரையிலும் உலக கால்பந்துப்போட்டி ஒன்றின் கால் இறுதிப்போட்டியில்கூட இந்தியா கால்வைக்க முடியாது என்பதை தைரியமாகக் கூறமுடியும். இதுதான் இந்தியாவின் நிலை.

கால்பந்து மட்டுமல்ல, ஏனைய பல விளையாட்டுகளிலும் இதே நிலைதான். சராசரி இந்தியர்களைவிட சற்று கூடுதல் வலுவுள்ள இந்தியர்களான சீக்கியர்களின் பலத்தை அதிகமாகக்கொண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக உலக அரங்கில் பிரபலமான விளையாட்டுக்களில் ஒன்றான ஹாக்கி விளையாட்டை நல்ல தரத்தில் விளையாடி வருகிறோம். என்றபோதிலும் என்ன காரணமோ தெரியவில்லை, கிருக்குப்பிடித்த இந்தியர்களுக்கு இந்த விளையாட்டை ரசிக்கத் தெரியவில்லை. தங்கள் சோம்பேரி, சோனி உடல்நிலை, மனநிலைக்கேற்பப் பொருந்திப்போகும் கிரிக்கெட்டை மட்டுமே விரும்புகிறார்கள். இவற்றிலிருந்து ஒரு உண்மை புலப்படுகிறது. இவர்கள் உலகத்தர மனிதர்கள் அல்ல, மாறாக கீழ்நிலையில் தான் இருக்கிறார்கள், என்றைக்கும் மேலேற மாட்டார்கள்.

வேறு சில விளையாட்டுகளில் மனிதரை மனிதர் கடுமையாக குத்தி, அடித்து, காயப்படுத்தி வெற்றிபெறுவது கொண்டாடப்படுகிறது. இதில் கையுறை அணிந்தும், அணியாமலும் வகைகள் உள்ளன. இதைப் பார்த்து மக்கள் கூட்டம் ரசித்து மகிழ்கிறது. இதெல்லாம் என்ன வக்கிரக்கொடுமை. இப்படி அடித்து துன்புறுத்தி கொடுமைசெய்து வெற்றி பெறும் வகையில் விளையாடப்படும் விளையாட்டுகளை ரசிக்கும் மனிதர்கள் மட்டும் எப்படி இருப்பார்களாம். அவற்றை

ஆதரிப்பதால் அவர்களின் மனங்களும் அதே வகையைச் சார்ந்து தானே இருக்கவேண்டும். குறிப்பாக குழந்தைகள் இவற்றை அதிகம் ரசிக்கும் வகையில் வழங்குவது மிகத்தவறு. ஏனெனில் சிறு வயதில் இருந்து அவர்களின் மனநிலையில் கடுமையை விரும்பத்தக்கதாக நிலையை ஏற்படுத்துவது ஆகிவிடும்.

இது பரம்பரை பரம்பரையாக பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்துவருவதால் எவரும் இதைப்பற்றி சொல்லவேண்டிய சூழலே இல்லாமல் ஆக்கிவிடப்பட்டிருக்கிறது. இதனால் மனிதநேயம், பிறரிடம் அன்புகாட்டுவது, பிறரின் துன்பத்திற்கு வருந்துதல் போன்ற மனிதப்பண்புகள் குறைந்துபோயின. மனிதர்களைவிட இவ்வகைப்பண்புகள் சிலவகை விலங்குகளில் கூட கூடுதலாக காணப்படுகின்றன. இதற்கு உலக நாடுகள் குதூகலித்து போட்டிகள் நடத்தி கும்மாளம்போடுகின்றன. இதில் என்ன கொடுமையெனில் தங்கள் நாட்டின் பெரும்பகுதி சககுடிமக்களுக்கு விடியும் இருளில் இருந்து வயிற்றுக்கு வேலை கொடுக்க உணவில்லாத தன்மையிலும் இந்த வெட்டி, வேண்டாத, தங்குளுக்கு அவசியம் தேவையான நிரந்தரப் பொருளைத்தராத, தரமுடியாத அடிதடிப்போட்டிகள், விளையாட்டுப்போட்டிகளில் கலந்துக்கொள்ளத்தான் வேண்டுமா?

உலக விளையாட்டுப்போட்டிகள் உலகநாடுகளுக்குள் அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் இன்னும் ஏதோதோ ஏற்படுத்துகிறது என அழகு வார்த்தைகளால் அன்று முதல் இன்று வரை சொல்லப்பட்டுவருகின்றன. ஆனால், இதெல்லாம் நிகழ்கிறதா, நிகழமுடியுமா, உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தமுடியுமான எனில் உறுதியாக இல்லை, இல்லை என வரிசையாக கத்த கதரமுடியும்.

ஏனெனில், இத்தனை ஆண்டுகாலமாக ஏதோதோ விளையாட்டுப்போட்டிகள் நடத்தி உலக நாடுகளுக்குள் எந்த வகையில் அன்பு, அமைதி, சகோதரத்துவத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏன் போர்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மாறாக விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி, தோல்வியினால் எழுந்த கருத்துவேறுபாடுகள், அடிதடிகள் சகிக்கமுடியாமைப் போன்றவைகளினால் நாடுகளுக்குள் உட்பகை, மதப்பகை, உள்மதப்பகை, உலகப்பகுதிகளுக்குள் போட்டா போட்டி எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன. எப்படியும் அடுத்தமுறை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தனி மனிதரிடமிருந்து நாடுகள் வரை பல தில்லுமுல்லுகள், பல படுபாதகச் செயல்கள் இருந்துவருகின்றன. அடுத்தவரை வீழ்த்துவதே பெருமை என்னும்போது எங்கிருந்து மனிதாபிமானம் வரமுடியும்.

இதற்காக விளையாட்டுப்போட்டிகள் வேண்டாம் என்பதில்லை. வருடங்கள் முழுவதும் விளையாடிக்கொண்டிருக்காமல் ஒரு சிறு காலத்திற்கு மட்டுமே விளையாட்டுகளினால் மக்களை அதன் தாக்கத்திற்கு உட்படுத்தி, மிக அதிக நாட்கள் வாழ்வின் மிக இன்றிமையாத பொருள் ஈட்டும் உழைப்பிற்கு வழிசெய்தல் வேண்டும்.

குறிப்பாக பொருள் இல்லாதவர்கள் குறைவாக விளையாட்டிலும், கூடுதலாக உழைப்பிலும் கவனம் செலுத்துவதே மேன்மை. உழைப்பை ரசிக்கும்படியாக செய்ய வழிகள் இருக்கின்றன.

நாளுக்கு நாள் கூடிவரும் விளையாட்டு மோகத்தால் உழைப்பின் பரிமானம் குறைந்துபோவதைப் எவரும் உணருவதாக அறியமுடியவில்லை. எந்நேரமும் விளையாட்டு, வர்ணனை, தொலைகாட்சி ஒளிபரப்பு, செய்திகள், தலைப்புச் செய்திகள், பேச்சுக்கள், விளம்பரங்கள் என மனி நேரத்தை வீணாக்கி ஏழைகளை ஏழைகளாகவே வைத்துக்கொள்ள வழிசெய்யப்பட்டுள்ளது.

அடித்துக்கொள்ளாமல் மனிதர்களுக்குள் வளம் பார்க்கும் விளையாட்டு ஆயிரம் வகை இருக்கின்றன. இதனால் அடிதடி விளையாட்டுக்கள் தேவையில்லை. இந்த அடிதடி விளையாட்டுக்களை நிறுத்திவிட்டால் மனிதநேயம் கூடுவதற்கு ஒரு வழி ஏற்படுத்திக்கொடுப்பதாகும்.

இதற்கு அடுத்ததாக இசைக் கூத்துகள் இருக்கின்றன. இதைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. அந்த அளவிற்கு இதுவும் மக்களை அலைக்கழித்துக்கொண்டு வேறு நற்செயல்களுக்கு அதிக ஆதிக்கம் கிடைத்துவிடாதபடி நேரத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறது. பலர் பாட்டுக்கள் கேட்டு தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை போக்கிவிடுவதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இந்தப் பூமிக்கு பாரமாய் ஏன் பிறந்தார்கள். இவ்வுலகிற்கு இவர்களால் என்ன நன்மை என்ற கேள்வியை கேட்பதில் என்ன தவறு?

பொழுதுபோக்குகள் என்பவைகள் இன்றைய காலத்தில் மிக அவசியமானதுதான். ஆனால் அதன் நேர செலவை வரையறுத்துக்கொள்ள வேண்டியது மூளை உள்ளளோரின் முக்கியக் கடமை. பொழுதுபோக்குகளில் திளைத்துக்கொண்டிருக்கிற, சுயஇன்பங்களில் மூழ்கிவிட்ட பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவ நினைக்கும் மனநிலையை பெறுவது என்பது குதிரைக்கொம்பாகத்தான் இருக்கும். பொழுதுபோக்கு நேரம் குறைந்தால் ஒரு வேலை பெரும்பகுதி பணக்கார மக்கள், ஏழைநாட்டு மக்களை நினைத்து வருந்த ஆரம்பித்து ஒரு நாள் எங்கேயும் பட்டினிச்சாவுகள் இல்லாமல் ஆகலாம்.

எனவே, பொழுதுபோக்குகளிலேயே நேரம், பணம், பளம், கவனம், உழைப்பு ஆகியவற்றை அதிகம் இழக்காமல் பொருதாரத்தைத் தேடும் தேவையிருப்பவர்கள் தங்கள் பொருளாதாரத்தைப் உயர்த்திக்கொள்ளுங்கள். இதன் மூலம் உழைப்பவர்கள் உலகில் கௌரவப்படுவதற்கு அதிக நேரம் செலவிடுங்கள் என்று மன்றாடப்படுகிறது. பொழுதுபோக்கை உழைப்பாக்கிக்கொள்வதைவிட உழைப்பை பொழுதுபோக்காக்கிக் கொள்வதே மிகச்சிறப்பு பெற்றதாகும்.

.....

## இ.சா.கோ.2

உலகத்தில் முதலாவது மக்கட்பெருக்கம் கொண்ட நாடான இந்தியா எண்ணற்ற தொல்லைகளுடன் உழன்று உறுமிக்கொண்டிருக்கிறது. இந்த பூமிப் பகுதியும் அதன் மக்களும் உலகத்தில் வேறு எந்த நாட்டினருக்கும் இல்லாத அளவு சிக்கல்களில் உள்ளனர் என்பதை பல இந்தியர்கள் அறிந்ததாக அறிய முடியவில்லை. எனவே, அச்சிக்கல்கள் எவை எவையெவைன இப்போது பார்ப்போம்.

முதலாவதாக இந்நாட்டின் சுற்றுப்புற அன்டைத்தொகுதிகளைப் பார்க்கையில் எந்நாடும் இந்நாட்டிற்கு உண்மையான, முழுமையான நட்பு நாடாக இருப்பதாக தெரிவதில்லை. பலவும் பொய் நட்பு எனவே தோன்றுகிறது. தெற்கேயுள்ள இலங்கையும் அதனுடனான பிரச்சினைகளும் இந்திய மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்பிரச்சினையில் இந்தியா நான்குவிதமாக நடந்துகொண்டு தவறைசெய்து வந்திருக்கிறது. ஒன்று , இலங்கை அரசுக்கு கூடுதலாக ஆதரவு காட்டுவது, இன்னொரு சமயம் விடுதலைப்புலிகளுக்கு கூடுதல் ஆதரவு தருவது, மூன்றாவதாக இருவருக்கும் சமமான ஆதரவுடன் கூடிய ஒருவகையான நடுநிலையை பின்பற்றுவது. இறுதியாக எதையும் கண்டுகொள்ளாமல் இருந்துவருவதாகும்.

ஈழத்தமிழர்கள் பிரச்சினையால் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் எப்போதும் ஒரு நிழல் பகை உண்டு. அதிர்ஷ்ட வசமாக ஒரு வேலை ஈழப்பிரச்சினை அமைதியாக தீர்ந்து காணப்பட்டு, ஒரு பத்தாண்டுகாலம் அந்நாட்டுமக்கள் சுமூகமாக வாழ்ந்தபிறகுதான் அந்நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர்கள் இந்தியாவை உள்மனதுக்குள் விரும்ப ஓரளவிற்கு சாத்தியம் இருக்கும்.

அடுத்து வடகிழக்கு நாடுகளான பங்களாதேசம், பர்மா போன்ற நாடுகளாளும் இந்தியாவிற்கு இடஞ்சலே. இன்றைய பங்களாதேஷ் என்கிற பழைய கிழக்குப் பாகிஸ்தான் , பாகிஸ்தான் வசம் இருந்தபோது அந்நாட்டின் விமானங்கள் இந்திய எல்லைக்குப் பறந்து அத்துமீரல் செய்ததை இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுருத்தலாக இருந்ததை சமாளிக்கமுடியாமல் இந்தியா தினறியது. இவ்வாறான சூழ்நிலையில் கிழக்கு பாகிஸ்தான் மிகுந்த தனிநாடு கோரிக்கையாலும் , சாதுர்யமாக பங்களாதேஷ் தனி நாடாக இருப்பின் இந்தியாவின் சுயநலத்தை கருத்தில்கொண்டு உதவி செய்ய வேண்டும்.

ஆனால் இன்று பங்களாதேஷ் நமக்கு உண்மையான நண்பன் இல்லை. இந்திய பாகிஸ்தான் எல்லையைப்போன்று, பங்களாதேஷ் இல்லையெனினும் எல்லைப் பிரச்சினைகள் மற்றும் இரு நாட்டு எல்லைப்பாதுகாப்பு படையினருக்குள் அவ்வப்போது துப்பாக்கிச் சூடு சண்டைகள், மரணங்கள் ஆகியவை அன்றாட அலுவல்களாகிப்போனது. எல்லைகள் வழியாக

கடத்தல்கள், மக்கள் ஊடுறுவல்கள், தீவிரவாதிகளின் சதிகள் என தினசரி நிகழ்ச்சிகளாயின.

பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளைப்பற்றி அநேகமாக, அநேகமான இந்தியர்களுக்கு நன்கு தெரியும். தீரவேத் தீராத நிலப்பிரச்சினைகள் வெள்ளை அளவுகள், எந்நாளும் இருந்துகொண்டிருக்கும். ஜார்ஜ்பெர்ணான்டஸ் கூறியதுபோல் பாகிஸ்தானைக்காட்டிலும் சீனாதான் என்றைக்குமே இந்தியாவின் முதலேறிய நாடு என்பது பல காரணிகளால் உறுதிப்படுகிறது. இதற்கு பல காரணங்களை சொல்ல இயலும்.

இரண்டும் ஆசியாவில் பெரிய மக்கட்தொகை கொண்ட நாடு என்பதும் அத்துடன் போட்டிப்போட்டுக்கொண்டு முன்னேறிக்கொண்டிருப்பதுமாகும். உண்மையில் இன்னும் சில ஆண்டுகளில் சீனா என்ற நாடுதான் உலகின் மிகப்பெரிய வல்லரசாகி அமெரிக்கா போன்ற நாடுகளை அடிபணியவைக்க காத்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறு நிகழவிருக்கும் அதன் வளர்ச்சிகளுக்கு பல அனுகூலங்கள் உள்ளன. இந்தியாவைவிட சுமார் இரண்டரை மடங்கு அதிகம் உள்ள அதன் நிலப்பரப்பு, அபரிமிதமான கணிமவளம், கடுமையாக உழைக்கும் இயற்கையிலேயே சுறுசுறுப்புள்ள மஞ்சள்நிற மக்கள், பெட்ரோலிய பொருட்களை அதிகம் உபயோகிக்காத பொது மகா ஜனம், எதுவும் உணவாகும் உணவுப்பழக்கம், எளிமையான வாழ்வுமுறை, தேசப்பற்று, ஒரே மொழி – ஒரே நாடு, நாட்டுமுன்னேற்றத்தில் வெறிகொண்ட வலிமையான தலைமை, எதிர்கட்சியில்லா ஆட்சி, பெரு மக்கள் கூட்டம் என எல்லாம் அந்நாடு பின்னாளில் உலகை ஆட்டிப்படைக்கப்போகிறது என்பதை கட்டியம் கூறுகிறது.

அவர்களுக்கு இப்பகுதியில் சக்தி சவாலாக இருப்பதாகத் தெரிவது இந்தியா மட்டுமே. ஏற்கனவே இவர்களுக்கிடையில் இருக்கும் பகை உலகறிந்தது. இப்போது இந்தியாவை எப்படியும் பின்னடையச் செய்யவேண்டுமென அவர்கள் நிச்சயம் முயற்சிப்பார்கள். அதற்கு அவர்களது கருவியாக இருக்க பாகிஸ்தான் தவம் கிடக்கிறது. சீனாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலுள்ள அன்னியோன்ய நட்பு அதற்கு பயன்பட்டு வருகிறது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள நாள்பட்ட சண்டை, காஷ்மீர் சிக்கள் போன்றவை உலகில் உள்ள சிக்கல்களின் முதலாவதாவது. அமெரிக்கா முதற்கொண்டு ஐரோப்பிய நாடுகள் வரை பகிரங்கமாகச் சொல்வதுபோல் உலகில் மிக ஆபத்தானப்பகுதி இந்தியாவின் தலையில் தலைப்பாரமாக இருக்கும் இந்த காஷ்மீரமே.

இந்திய பாகிஸ்தான் பிரச்சினை எப்போது தீரப்போகிறதோ தெரியவில்லை. தீர்வதும் சிரமமே. அவ்வப்போது பெரும் அதிகாரிகள் முதல் தலைமை ஆட்சியாளர்களை வரை அங்கேபோவதும், இங்கேவருவதும், ஏதேதோபேசியும், கைகுலுக்கள்கள் செய்வதும் நடந்துகொண்டு வருகின்றன. ஆனால், தீர்விற்கான ஒரு சிறு ஒளி கூடத்தெரியவில்லை.

பெயருக்காக சில பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. ஜான் ஏறினால் முழம் சறுக்குகிறது. அந்தந்த தகுந்த நேரங்களில் சீனாவும், அமெரிக்காவும் பல சலுகைகள், உதவிகள், இராணுவத் தளவாடங்கள் போன்றவற்றை ஏராளமாக பாகிஸ்தானுக்கு வழங்கி இதற்கு ஆய்ப்பு வைப்பார்கள்.

இம்மாதிரி போய்கொண்டிருந்தால் காலகாலத்திற்கு இப்படியேதான் நடந்துகொண்டிருக்கும். ஒருநாளும் துன்பம் தீராது. இருநாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு கோடான கோடி செல்வங்களை இராணுவசெலவுக்களுக்காக இழந்து பொருளாதார முன்னேற்றத்தில் முன்னேறிப்போகிறார்கள். எப்படியாவது இக்காஷ்மீர் பிரச்சினை ஒய்ந்துவிட்டால் பின்னர் இந்தியாவும் உலகின் ஒரு ராஜாதான்.

வேறு வழிகளில் தீர்வு கிட்டாவிடில் இதுதான் இறுதிவழியாக இருக்கலாம். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை பாகிஸ்தான் பகுதியாக ஏற்றுக்கொண்டு, இந்தியாவில் உள்ள பிரச்சினைக்குரிய காஷ்மீரப்பகுதியிலிருந்து ஓடி வந்தவர்கள், விரட்டப்பட்டவர்கள் , வாழும் மக்களின் விருப்பத்தை தெரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இந்தியாவை விரும்புகிறவர்கள், பாகிஸ்தானை விரும்புகிறவர்கள். தனி நாடுகளை விரும்புகிறவர்கள். என மூன்று பிரிவுகள் கொடுத்து ஓட்டெடுப்பு நடத்தி கருத்தறிந்து செயல்படலாம் . இதை இந்தியா பாகிஸ்தான் காஷ்மீர் மக்கள் மூவரும் சேர்ந்து ஐ.நா.சபையின் ஒத்துழைப்புடன் செய்வது சிறப்பு.

இங்கு தீர்வு ஏற்பட்டால் சில முதலை, கரடி நாடுகள் பகையை நிலைப்படுத்தி ஊக்குவித்து ஆயுதங்கள் விற்று வருவது நின்றுபோகும். நம்முடைய வளமை கிடுகிடுவென உயரும். அநாவாசியச் செலவினங்கள் மனிதச் சாவுகள் இல்லாமல் போகும். அமைதி, நிம்மதி, கௌரவம் உண்டாகும்.

இந்த காஷ்மீரினால் இந்தியவிற்கு உலக அரங்கில் மரியாதைக்குறைவே ஒழிய இதில் எந்த கௌரவமும் தரப்படவில்லை. இந்தியாவைப்பற்றி இதனால் தவறான கருத்து நிலவுகிறது என்தே நிதர்சனம். காஷ்மீர் பகுதியை உலகத்தில் பல நாடுகள் உலக தேசப்படங்களில் தனி நாடாகவே பிரித்து குறித்திருக்கிறார்கள். காஷ்மீரும், இந்தியாவும் மற்றைய மாநிலங்களைப்போன்றது இல்லை. காஷ்மீரர் அல்லாத வேறு எந்த இந்தியர்களும் அங்கு ஒருதுளி இடம் வாங்கும் உரிமையில் இல்லை. அவர்களுக்கென தனி நாடு கொடி, தேசிய கீதம், இந்திய பொது அரசியலமைப்பில் அடங்காத சட்டங்கள் என பல சலுகைகள் உண்டு.

சுதந்திர போராட்ட காலத்து பழைய வரலாறுகளை புரட்டிப்பார்த்தால் காஷ்மீர் இந்தியாவைவிட பாகிஸ்தான் பகுதியுடனேயே நெருக்கமாக இருந்திருக்கிறது. அப்போதைய பாகிஸ்தான் தலைவர்கள் நடந்துகொண்ட விதம் பிடிக்காமல் போகவே காஷ்மீர் அரசர், ஹரிசிங் தன் சுயவிருப்பத்தின் காரணமாக இந்தியாவில் பாதுகாப்பின்றி வந்தார். பின்னர் மெல்ல மெல்

காஷ்மீர் இந்திய பகுதியாக மாறும் நிலை ஏற்பட்டது. இதனால் பாகிஷ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் சில போர்கள் நடந்தேறின. இதற்கு சீனா மற்றும் அமெரிக்காவின் பங்கு மிக முக்கியமானது. சீனா இந்தியா போருக்கே மறைமுகமாக காஷ்மீர் ஒரு காரணமாக இருந்ததை யாரும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. காஷ்மீரத்தை இந்தியா சேர்த்துக்கொண்டதையும் இந்தியாவின் நிலப்பரப்பு கூடுவதையும் சீனா விரும்பவில்லை.

புத்த மதத்தை தழுவும் சீன தீபெத் நாடுகளின் சிக்கல்களிலும் இந்தியா வலுவில் மாட்டிக்கொண்டது. சீனா தீபெத் பகுதியை ஆக்கிரமித்தபோது அதன் மதத் தலைவர் தலாய்லாம இந்தியாவின் தஞ்சம்புகுந்தார். அவருக்கு இங்கு பெரிய மரியாதையும் ராஜ்ய தலைவர் அந்தஸ்தும் வழுங்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருவதால் சீன இந்தியா உறவில் எப்போதும் ஒருவித நிழல் பகை இருந்துவருகிறது. தீபெத் தனி நாடாகினால் தங்களுக்கு சாதகாமவிடும் என்ற பேராசையில் இந்தியா செயல்படுவது எப்படி சரியாகும். சர்வதேச அரங்குகளில் இப்படி ஒரு நாட்டு தலைவர் தன் ஆட்சி அபகரிக்கும்போது வேறு நாடுகளில் அடைக்கலம் புகுவதும் அவ்வாறு வந்தவர்களை முறையான மரியாதை வழங்கப்படுவதும் நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்கள்தான். இருப்பினும் அடைக்கலம் வருபவர்கள் நட்பில்லாத நாட்டிற்கு வருவதால் பகைமையையும் கூடவே கொண்டு வந்து சேர்க்கிறார்கள்.